# சிறுபாணாற்றுப்படையில் பயணக் கூறுகள்

# Travel Components in Cirupanatruppadai

**அ.திலகவதி**, ஆய்வியல் நிறைஞர், கோயம்புத்தூர் – 641046

**A.Thilagavathi**, Researcher, Coimbatore – 641046

**முனைவர் ம.சிவபாலன்,** உதவிப் பேராசிரியர், மொழித்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்- 641006

**Dr Sivabalan M,** Assistant Professor, Department of Languages, Sri Ramakrishna College of Arts and Science, Coimbatore – 641006

ORCiD: https://orcid.org/0000-0002-3976-7706

**DOI : 10.5281/zenodo.7879864**

## Abstract

Travel is an essential part of human life. When man began to move from one place to another, travel also began. Traveling is done by humans in many situations like education, business, attending meetings, sports, rivalry, relationship, mission, visiting new places. The primordial human habit of moving from place to place without settling in one place, seeking good food, safe shelter, and fertile land continues to this day due to various reasons. It was their poverty that caused the Panars to resort to Paris. They sought helpers to alleviate their poverty. While singing in this way, the river is a travel book that comforts Panan in his poverty by telling him about the four lands they see on the way, the people and animals that live there and their life elements.

## ஆய்வுச் சுருக்கம்

பயணம் என்பது மனித வாழ்வில் ஓர் இன்றியமையாத பகுதியாகும். மனிதன், என்று ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயர்ந்து செல்ல தொடங்கினானோ அன்றே பயணம் செல்லுதலும் தொடங்கிவிட்டது. பயணமானது கல்வி, வாணிகம், கூட்டங்களில் பங்கேற்றல், விளையாட்டு, பகை, உறவு, தூது, புதிய இடங்களைக் காணுதல் போன்ற பல சூழ்நிலைகளில் மனிதர்களால் மேற்கொள்ளப்படுகிறது. ஓர் இடத்தில் நிலையாக வசிக்காமல் இடம் விட்டு இடம் பெயர்ந்து, நல்ல உணவையும், பாதுகாப்புடைய உறைவிடத்தையும், வளமுடைய பூமியையும் நாடிச்செல்லும் ஆதி மனிதனியல்பு பல்வகைக் காரணங்களால் இன்றளவும் தொடர்கிறது. பாணர்கள் பரிசில் நாடிச் செல்லக் காரணமாக இருந்தது அவர்களுடைய வறுமையே ஆகும். தம் வறுமை தீரப் பொருள் உதவி செய்யும் உள்ளங்களை நாடிச் சென்றனர். அவ்வாறு பாடிச் செல்லும் போது வழியில் அவர்கள் கண்ட நானிலத்தைப் பற்றியும் அங்கு வாழக் கூடிய மக்கள் விலங்குகள் போன்றவற்றையும் அவர்களுடைய வாழ்வியல் கூறுகளைப் பற்றியும் தன் எதிர்ப்பட்ட வறுமை நிலையில் உள்ள பாணனிடம் கூறி ஆற்றுப்படுத்தும் ஒரு பயண நூல் ஆற்றுப்படை ஆகும்.

**Keywords:** ஆற்றுப்படை, வழிப்படுத்துதல், சங்க இலக்கியம், பாணன், விறலி, சிறுபாணாற்றுப்படை

**முன்னுரை**

ஆற்றுப்படை நூல்களில் மூன்றாவதாகத் திகழ்வது சிறுபாணாற்றுப்படையாகும். பெற்ற செல்வத்தால் தன்னுடைய வறுமை மட்டும் நீங்கினால் போதும் என்ற சுயநலமான மனப்பான்மையை விடுத்து தம்மைப் போல் வறுமையால் வாடுகின்ற கலைஞர்களின் வறுமையும் நீங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தினை வெளிப்படுத்துவதாக இவ்வாற்றுப்படை திகழ்கிறது. அன்றைய காலகட்டத்தில் வாழ்ந்த மக்களுடைய பண்பாடு பழக்கவழக்கம் போன்றவை சிறுபாணன் மேற்கொண்ட பயணத்தின் மூலமாக விளக்குவது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**நாணிலப் பயணம்**

தமிழ்ச் சான்றோர்கள் தமிழக நிலத்தை நான்கு வகையாகப் பிரித்து 'நாணிலம்' எனப் பெயரிட்டனர் அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப்படும். ஐந்நிலத்திற்கும் முதற், கரு, உரிப்பொருள்கள் சுட்டப்பட்டுள்ளன. கருப்பொருளானது சில நேரங்களில் நிலத்திற்கு நிலம் மாறுபடும் தன்மை கொண்டது பரிசில் பெற்று வந்த பாணன் பரிசில் பெற விளையும் பாணனிடம் இன்ன மன்னனிடம் செல் என்று விழிப்பதன் மூலமாக அன்றைய காலகட்ட நில அமைப்புகளையும் அங்கு வாழ்ந்த மக்களின் பழக்கவழக்கங்களையும் உணர்த்தும் விதமாக சிறுபாணனின் பயணமானது அமைந்துள்ளது.

**பாலை நிலப் பயணம்**

பரிசில் பெற்று திரும்பி வந்த பாணன் எதிர்ப்பட்ட பாணனிடம் நல்லியக்கோடனைச் சந்திக்க சென்ற வழிப்பாதையின் இயல்பு, காலத்தின் நிலை, மகளிரின் நிலை போன்றவற்றை எடுத்துக்கூறும் இடமாக பாலைநிலமானது உள்ளது.

**“வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப**
**வேனில் நின்ற வெம்பத வழிநாட்**
**காலைஞா யிற்றுக் கதிர்கடா வுறுப்பப்**
**பாலை நின்ற பாலை நெடுவழிச்**
**சுரன் முதல் மராஅத்த வரிநிழல் அசைஇ” (சிறு.8-12)**

இளவேனிற் காலமானது முடிந்து சூரியன் கடுமையான கதிர்களை வீசிக்கொண்டு இருக்கும் படியாக முதுவேனிற்காலமானது ஆரம்பமானது.அத்தகைய முதுவேனிற்கால வெம்மையினால் பாலை நிலத்து கடப்ப மரமானது செறிவில்லாத வரி நிழலைத் தந்தன. பாலைத் தன்மை நிலைபெற்ற அவ்விடத்தில் சிறுபாணன் தனது களைப்புத் நீங்கும்படியாக அவனது சுற்றத்தோடு தங்குகிறான்.

**“முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து**
**நல்லியப் பிழந்து நடுங்குதுயர் வறுத்துப்**

**பாலை எனப்தோர்படிவங் கொள்ளும்"**

"முல்லையும் குறிஞ்சியும் நல்லியல்பு கெட்டுதுத் தன்னைச் சார்ந்தோரை நடுங்கச் செய்யும் பாலை எனப்படும் கொடுந் தன்மையுறும்" (பெ.மாதையன்-இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும்-ப-96) என்று பாலை நிலத்தைப் பற்றி சிலப்பதிகாரத்தின் காடுகாண் காதையில் சுட்டப்பட்டுள்ளது.

**பயணத்தில் விறலியரின் நிலை**

ஆண் மயிலானது விறலியரின் கூந்தலைப் போல நம்முடைய தோகையானது இல்லையே என்று வெட்கி அதனுடைய துணையான பெண் மயிலின் பின்னால் சென்று ஒழிந்து கொள்ளுமாம்.

**"மணிவயின் கலாபம் பரப்பி பலஉடன்**
**மயில் மயிற் குளிக்கும் சாயல் சாஅய்"** **(சிறு-பா- 15-16)**

நுங்கில் உள்ள சுவையான நீரினைப் போல, எயிற்றினையும், முல்லை மலரைச் சூடிக் கொள்ளத் தகுந்த கற்பினையும், மான் போன்ற மருண்ட பார்வையினையும் உடையவளாகவும் இருந்துள்ளனர்.

**"இன்சே றிகுதரும் எயிற்றின் எயிறெனக்**
**குல்லையம் புறவிற் குவிமுகை அவிழ்ந்த**
**முல்லை சான்ற கற்பின் மெல்லியல்**
**மடமான் நோக்கின் வாணுதல் விறலியர்"** **(சிறு.பா.28-31)**

விறலியரின் தோற்றப் பொலிவினை இயற்கைப் பொருள்களின் அழகு நலன்களோடு ஒப்பிட்டு கூறியுள்ளதன் மூலம் அப்பொருள்களின் தன்மையையும் அறியமுடிகிறது.

பயணத்தின் போது பெண்களையும் உடன் அழைத்துச் சென்றுள்ளனர். சங்கப் பாடல்களில் தலைவன் தலைவி இருவருக்கும் இடையில் தலைவனைப் பரிமாற்றம் செய்யக் கூடிய வகையில் தோழியானவள் பயணம் மேற்கொள்வதைக் காண முடியும். தலைவியானவள் சங்கப் பாடலில் உடன்போக்காக பயணம் மேற்கொண்ட செய்திகளை அகநூல்களில் காணலாம்.

**குறிஞ்சி நிலம்**

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். குறிஞ்சி நிலத் தலைவனை வெற்பன், பொருப்பன், சிலம்பன் என்றும் தலைவியை கொடிச்சி என்று அழைப்பர். முலை வாழ்க்கைக்கேற்ற திண்ணிய உடல் வலிமை வாய்ந்தவர்கள். வேட்டையாடுதல், கிழங்கெடுத்தல் போன்றவற்றை இவர்கள் தொழிலாகக் கொண்டனர்.

**வஞ்சிப் பயணம்**

பருத்த மீன்கள் துண்டாகும் படியாக மிதித்துக் கொண்டும், செங்கழுநீர்மலரை மேய்ந்த படியாக எருமையானது இருக்கும். பசுமையான மிளகுக்கொடி படர்ந்திருக்கும், பலாமரத்தின் நிழலை அடைய, மஞ்சள் இலைகள் முதுகைத் தடவிக் கொண்டுக்க செழுங்கழுநீர் மலரை உண்டு கொண்டும் காட்டு மல்லிகைப் பூக்கள் பூத்திருக்கக் கூடிய அளவிற்கு வளமுடையதாக சேரனுடைய குடநாட்டின் தலைநகரான வஞ்சியானது திகழ்ந்துள்ளது என்று பயணத்தில் கண்ட இயற்கை வளத்தைப் பற்றி பாணனிடம் அழகுற எடுத்துரைக்கிறான் பரிசில் பெற்ற பாணன்.

அதோடு சேரனுடைய புகழினைப் பற்றி கீழ்வருமாறு சுட்டப்பட்டுகிறது

**"குடபுலங் காவலர் மருமான் ஒன்னார்**
**வடபுல இமயத்து வாங்குவிற் பொறித்த**
**எழுவுறழ் திணிதோள் இயல்தேர்க் குட்டுவன்" (சிறு.பா.38-4,)**

சேரநாட்டின் அரச மரபில் பிறந்தவனும், கயைணமரம் போல வலிமையான தோள்களை உடையவனுமான சேரன் செங்குட்டுவன் வடதிசை மன்னர்களை வென்று இமயத்தில் விற்கொடியை பொறித்தவன் சேரன் செங்குட்டுவன். சேரநாட்டின் நீர்வளம், சேரனின் போர்ச் சிறப்பு, அவனுடைய கொடைச் சிறப்பு போன்றவற்றை வஞ்சிப் பயணம் விளக்குகிறது.

**கொற்கைப் பயணம்**

பாண்டியனின் கொற்கை நகர் நோக்கிய பாணர்களின் பயணமானது, உப்பு வாணிகம், பற்றியும், உப்பு வாணிகம் செய்யும் மகளிர்பற்றியும், மதுரை நகரின் தெருக்களைப் பற்றியும் தெளிவாக விளக்குவதாக உள்ளது.

**"உளரியல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற**
**இளர்பூண் புதல்வரொரு கிறுகிளி ஆடும்**
**துத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்**
**தென்புலங் காவலர் மருமான் ஒன்னார்" (சிறு.பா.60-63)**

உப்பு வாணிகர்களின் வண்டியானது பல இழைகளைக் கொண்டு செயற்கையாய் உருவாக்கப்பட்ட பூமாலையைச் சுற்றியதாக இருந்துள்ளது. இடையினையும், தோளினையும் மறைக்கும் படியாக ஐந்து வகை ஒப்பனைகள் செய்யப்பட்ட பின்னிய கூந்தலை உடைய உமணப் பெண்களின் குழந்தைகளோடு, பிள்ளைகள் போன்ற பெண் குரங்குகள் கிளிஞ்சலின் உள்ளே முத்துக்களை இட்டு விளையாடக் கொண்டிருக்கும் தன்மையினையுடையதாக பாண்டியனின் கொற்கை நகரமானது விளங்கிய செய்தியை பாணர் மேற்கொண்ட பயணத்தின் மூலமாக அறியமுடிகிறது.

**போக்குவரத்துச் சாதனங்கள்**

"சங்க காலத் தமிழர்கள் வாணிகப் பொருட்களைக் கடல் கடந்து விற்பனை செய்துள்ளனர். சங்க கால மக்களும், மன்னர்களும் வணிகம் போர்போன்றவற்றிற்கு ஊர்திகளைப் பயன்படுத்தியுள்ளனர்." (மு.சண்முகம்பிள்ளை-சங்கத் தமிழ வாழ்வியல்-ப-61) அறிவியல் வளர்ச்சியில் உற்பத்தி செய்த பொருட்களை இன்று பல்வேறு இடங்களுக்கு கொண்டு செல்ல முடிகிறது.

அக நூல்களிலும், புற நூல்களிலும் ஊர்திகளாக யானை, குதிரை போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன.

**"தேரும் யானையும் குதிரையும் பிறவும்**
**ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப" (இளம்பூரணர்-தொல்காப்பியம்-ப-325)**

தேர் யானை, குதிரை போன்ற இவை மட்டுமே அல்லாமல் இன்ன பிறவும் போக்குவரத்துச் சாதனங்களாக இருந்தன என்று தொல்காப்பிய நூற்பா வழி அறியலாம். மேலும்,

**"ஒட்டகம் குதிரை கழுதை மரையிவை" (இளம்பூரணர்-தொல்காப்பியம்-ப-525)**

என்ற மரபில் நூற்பா ஒட்டகம், குதிரை, கழுதை, மான் போன்றவை இருந்ததையும் அறிய முடிகிறது. தேர், யானை, குதிரை, கழுதை போன்றவை போக்குவரத்துச் சாதனங்களாக இருப்பதற்கு சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**"பேரிசை ஊர்திப்பாகன்" (இளம்பூரணர்-தொல்காப்பியம்-ப-248)**

ஊர்திகளை திறம்படச் செலுத்துகின்ற பாதர்கள் இருந்தனர் என்று கற்பியல் நூற்பா வழி அறியலாம்.

**"உள்ளம் போல உற்றுழி உதவும்**
**புள்ளியற் கலிமா உடைமை யான" (இளம்பூரணர்-தொல்காப்பியம்-ப-312)**

குதிரை செல்லும் வேகத்திலேயே பாணனின் வல்லமையை அறிய முடியும் என்பதை இந்நூற்பா வரிகள் விளக்குகின்றன.

**தேர்**

சங்க அகப்புறப் பாடல்களில் தேரைப் பயன்படுத்தியதற்கான சான்றுகள் உள்ளன. புறப்பாடல்கள் மன்னர்களும், தளபதிகளும் தேரின் மீதமர்ந்து போரிட்டனர் என்பதை விளக்குகின்றன. அகப்பாடல்களில் தேர் தலைவனுக்குரியதாக உள்ளது. தேர்கள் பல்வேறு வடிவத்தை உடையதாகவும், அதன் மீது கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன என்பதற்கான சான்றுகளைச் சங்க இலக்கியப் பாடல்களில் காணமுடிகிறது. தேர் என்பது குதிரைகளோடு சேர்ந்த போக்குவரத்துச் சாதனமாக இருந்துள்ளது.

**உறையூர்பயணம்**

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படும். ஆற்றுப்பாய்ச்சல் ஏரிப்பாய்ச்சல் உள்ள நிலப்பகுதியே மருதநிலமாகும். மருத மரங்கள் அதிகமாதலின் மருதம் எனப் பெயர் பெற்றது. நீர்வளத்தால் சிறந்தது. ஐவகை நிலங்களிலும் மருதமே உயர்வாகக் கருதப்படுகிறது. "உலகில் புகழ் பெற்ற பழைய நாகரீகங்கள் அனைத்தும் ஆற்றுப்பாய்ச்சல் நிறைந்த மருதநிலத்திலேதான் தோன்றின என்பது வரலாறு கூறும் உண்மையாகும். (அ.கிருட்டிணன்-தமிழர் பண்பாட்டியல்-ப-63), மருதநிலத்தே வாழும் மக்கள் களமர், உழவர் எனப்படுவர்.

ஏரிகளில் உழவுத்தொழிலில் பயிற்சி பெற்ற நல்ல எருதுகளைப் பூட்டி உழுவர். உழவர் எருதுகளைத் தேர்ந்தெடுத்து ஏர்களில் பூட்டுவர் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

**"ஓவத் தன்ன உண்டுறை மருங்கிற்**
**கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தான்**
**வருமுலை அன்ன வண்முகை உடைந்து**
**திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை" (சிறு-பா.70-73)**

உரைந்து வைத்த ஓவியம் போன்ற குடிநீர்த் துறையில் உள்ள தாமரை மலரின் நிறமூட்டிய தும்பியானது தனது பெண் தும்பியைத் தழுவிக் கொண்டு சீகாமரம் என்னும் பண்ணைப் பாடிக்கொண்டிருக்கும் இயல்பினையும்,

**"குணபுலங் காவலர் மருமான் ஒன்னார்**
**ஓங்கெயிற் கதவம் உருமுச்சுவல் சொறிவும்**
**தூங்கெயில் எறிந்த தொடிவிளங்கு தடக்கை**
**நூடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்" (சிறு-பா-79-82)**

சோழர் குடியில் பிறந்து, பகை மன்னர்களின் கோட்டையை அழிக்கும் தன்மையையும், சிறப்புடைய தேரினையுடையவன் செம்பியன் என்று சோழனுடைய சிறப்பினைக் கூறுவதோடு, மக்களின் வாழ்வாதாரங்கள் நிறைந்த செழிப்பான பகுதியாக உறையூர் இருந்துள்ளது என்பதை சிறுபாணனின் உறையூர்ப் பயணம் சுட்டுகிறது.

**எயிற்பட்டினப் பயணம்-நெய்தல் நிலம்**

"கடற்கரையை அடுத்த பெருமணற்பகுதியில் கடல் வளத்தை நம்பி வாழும் மக்கள் உறைந்தனர். இங்குள்ள ஊர்கள் கடலையடுத்தும் உப்பங்கழியையடுத்தும் தாழை வேலிகளுடன் காணப்பட்டன. இந்த ஊர்களை 'பாக்கம்' என்பர்" (மு.சண்முகம்பிள்ளை-சங்கத் தமிழர் வாழ்வியல்-ப-61) இந்நில மக்கள், வேல் போன்ற உண்மையான பார்வையினைக் கொண்ட எயிற்பட்டினத்து நுளையர் பெண்கள் கள்ளினை,

**"நதிமேல் நோக்கின் நுளைமகள் அரித்த**
**பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்**
**கிளைமலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்" (சிறு-பா.157-159)**

காய்ச்சி வடிகட்டி வைத்திருப்பார்கள். அதனைப் பரதவர் உங்கள் வாயில் ஊட்டுவர். அதனைப் பருகிவிட்டு குழல் ஓசையின் தாளத்திற்கு ஏற்ப ஆடக்கூடிய விறலியரோடு,

**"வறற்குழந் சூட்டின் வயின்வயன் பெறுகுவிர்" (சிறு-பா.160)**

குழல் மீன் கருவாட்டினையும் சேர்த்துண்டு விட்டு வேலூரினை நோக்கிப் பயணத்தை துவங்கலாம் என்று நெய்தல் நில அழகினைப் பற்றியும், நெய்தல் நிலத்து மக்களின் விருந்தோம்பல் பண்பினைப் பற்றியும் விளக்கும் விதமாக எயிற்பட்டினத்தின் பயணமானது உள்ளது.

**வேலூர்பயணம்-முல்லை நிலம்**

எயிற்பட்டினத்திலிருந்து வேலூருக்குப் பயணம் செய்யும் வழியில் அவரை, பவழம் போல பூக்களைப் பூத்திருக்கும். மயிலினது கழுத்து போல காயா மலர்கள் பூத்திருக்கும். இத்தகைய இயல்பினை உடையதாக முல்லை நிலத்தில் உள்ள வேலூரானது விளங்குகிறது.

**ஆமூரின் பயணம்-மருத நிலம்**

வேலூரில் இருந்து ஆமூர் செல்லக் கூடிய வழிகள் மருதநிலக் காட்சிகளையும் ஒழுக்கக் கூறுகளையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

**"மதிசேர் அரவின் மானத் தோன்றும்**

**மருதஞ் சான்ற மருதத் தண்பனை**

**அந்தணர் அருகா அருங்கடி வியனகர்** **(சிறு-பா-185-187)**

கயல் மீனினைப் பாய்ந்து கவரக்கூடிய இயல்பை உடையது நாரை. அந்நாரையின் நகமானது வெண்தாமரை மலரின் இலைகளைக் கிழித்து தழும்பினை உண்டாக்கியிருக்கும். நிலவினைப் பாம்பு விழுங்கும் விதமாகவும், குளிர்ச்சி பொருந்திய வயல்களை உடையதாகவும் ஆமூரின் மருதநிலம் காணப்படுகிறது.

**பயணம் செய்த ஊர்கள்**

சிறுபாணன் சென்ற வேலூர் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் தாலூகாவில் இடங்களுக்கும், எயிற்பட்டினத்துக்கும் இடையில் இருக்கிற வேலூரே என்பது புலப்படுகிறது. வேலூரில் தங்கிய சிறுபாணன் அங்கிருந்து புறப்பட்டு வடமேற்காக பயணத்தைத் தொடங்கி மருத நிலத்தில் உள்ள ஆமூர் என்னும் ஊரை அடைகிறான். "நல்லாமூர் என்ற ஊர் இருக்கிறது. இந்த நல்லாமூர் சிறுபாணாற்றுப்படை கூறுகிற ஆமூராக இருக்கக்கூடும். பழைய ஆமூரும் இப்போதைய நல்லாமூடும் ஒரே ஊராக இருக்கக் கூடும். ஏனென்றால் இந்த நல்லாமூர் கிடங்கிறுக்கு அடுக்கில் இருக்கிறது."(மயிலை சீனி .வேங்கடசாமி-சிறுபாணன் சென்ற பெருவழி-ப-61) ஆமூரில் இருந்து மேற்கு நோக்கி பயணம் செய்து கடைசியில் நல்லியக்கோடனுடைய கிடங்கில் என்றும் ஊரை அடைந்ததாக சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.

**பயணத்தின் நோக்கம்**

அகில் புகை இடுவதற்காக விரிக்கப்பட்ட பெண்களின் கூந்தல் மயிலின் தோகை போல காட்சி தருகிறது. அதோடு,

**"துணிமழை தவழும் துயல்கழை நெடுங்கோட்டு**

**ஏறிந்துரும் இறந்த எந்தருஞ் சென்னிக்**

**குறிஞ்சிக் கோமான், கொய்தளிர்க் கண்ணி**

**செல்லிசை நிலைஇய பண்பின்**

**நல்லியக் கோடனை நயந்தளிர்செயனே"** **(சிறு-பா.265-269)**

மூங்கில் மரங்கள் நிறைந்திருப்பதால் இடியானது அம்மூங்கில் மரங்களைக் கடக்க முடியாமல் கடந்து செல்லும், பிறர் அறியா வண்ணம் வளங்களையும், உயரத்தையும் உடைய மலைகளால் சூழப்பட்ட நிலத்தின் தலைவன் நல்லியக்கோடன் அவனை நாடிச் சென்றால் இல்லை என்று கூறாது பரிசுப் பொருட்களை வழங்குவான்.

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்று பல்வேறுபட்ட நிலங்களைக் கடந்து நல்லியக்கோடனை நாடிச் சென்ற பாணனின் பயண நோக்கம் தனது வறுமை நிலையினைப் போக்கி செல்வ செழிப்போடு வாழ வேண்டும் என்பதேயாகும்.

**முடிவுரை**

எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் போன்ற ஊர்களைப் பற்றிக் கூறும் இடத்து அங்கு வாழக் கூடிய மக்களுடைய வாழ்க்கை முறை, அவர்களுடைய உணவு பழக்கவழக்கம் போன்ற செய்திகள்

சுட்டப்படுகிறது பாணன் பயணம் மேற்கொள்ள காரணம் அவனுடைய வறுமை நிலை என்பதை சிறுபாணாற்றுப்படை தெளிவுபடுத்துகிறது. நானிலத்தைப் பற்றி நத்தத்தனார் விவரித்துக் கூறுவதில் இருந்து பழந்தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று நாட்டு வளம், செல்வச் செழிப்பு, உணவுப் பழக்கம் வழக்கம் போன்ற வாழ்வியல் செய்திகளை அறிந்து வந்துள்ளார் என்று உணர முடிகிறது. சிறுபாணனின் பயண மேற்கொள்ள காரணம் வறுமைத் துயரில் இருந்து விடுபட்டு, வாழ வேண்டும் என்பதேயாகும்.

**துணை நின்ற நூல்கள்**


1. பெ.மாதையன்-இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2004.
2. மு.சண்முகம்பிள்ளை-சங்கத் தமிழர் வாழ்வியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004
3. இளம்பூரணனார்-தொல்காப்பியம், கௌரா பதிப்பகக் குழுமம், சென்னை, 2012
4. அ.கிருட்டிணன்-தமிழர் பண்பாட்டியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1992.
5. மயிலை சீனி .வேங்கடசாமி-சிறுபாணன் சென்ற பெருவழி, Tamil Culture, Vol.IX No.1 January 1961.
6. பொ.வே சோமசுந்தரனார் (உ.ஆ), சிறுபாணாற்றுப்படை, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி, 2000


**References**


1. Madhaiyan.P, Inakkuzhu Samuthayamum Arasu Uruvakkamum, Pavai Publications, Chennai, 2004
2. Shanmugampillai.M, Sanga Thamizhar Vazhviyal, Ulaga Thamizharaychi Niruvanam, Chennai, 2004
3. Ilampuranar, Tholkappiyam, Gowra Pathippaga Kuzhumam, Chennai, 2012.
4. Krittinnan. A, Thamizhar Pnapattiyal, Manivasagar Pathippagam, Chennai, 1992.
5. Vengatasami, Mailai Seeni, Sirupanan Senra Peruvazhi, Tamil Culture, Vol.IX No.1 January 1961.
6. Somasundaranar.Po.Ve (Urai Aasiriyar), Sirupanatruppadai, Thirunelveli Saiva Siddhantha Norpathippu Kazhagam, Thirunelveli, 2000.


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**


**திலகவதி. அ, சிவபாலன். ம “ சிறுபாணாற்றுப்படையில் பயணக் கூறுகள்”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 2, ஏப்ரல் 2023, பக். 27-34


**Cite this Article in English**


**Thilagavathi. A, Sivabalan M “ Travel Components in Cirupanatruppadai”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.3 Issue 2, April 2023, pp. 27-34